ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் *3–25*

(ஆஅ) தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2009

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/2009), மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/2009)[@] ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு ஜி.கே. மணி.

திரு ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் இந்து சமய அறநிலையத் துறையின் கீழுள்ள திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்கள் ஏராளமாக இருக்கின்றன. ஆனால், கடந்த காலங்களில், அதாவது 100 ஆண்டுகள், 50 ஆண்டுகளுக்கு முன்பு நிர்ணயிக்கப்பட்ட மிகச் சிறிய அளவிலான அந்தத் தொகையைக்கூட குத்தகையாகச் செலுத்தாமல் நிறைய பேர் ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அப்படி ஏமாற்றுகிறவர்களிடமிருந்து அந்தக் குறைந்த தொகையை மீண்டும் பெறப் போகிறீர்களா அல்லது கூடுதலாக குத்தகையை நிர்ணயிக்கப்

@ 25–6–2009 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

சட்டமன்றம்
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

போகிறீர்களா என்பதை அறிய விரும்புகிறேன். இந்தக் குறைந்த குத்தகையைக்கூட செலுத்தாமல் ஏமாற்றிக் கொண்டிருப்பவர்கள் ஏராளம். அவர்களை என்ன செய்யப் போகிறீர்கள்? ஆகவே, இவற்றையெல்லாம் அரசு கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். அதேநேரத்தில், இப்படி குத்தகையைச் செலுத்தாமல் ஏமாற்றிக் கொண்டிருப்பவர்களை அரசின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவருவதோடு; அதற்கு முறையான குத்தகைத் தொகையை நிர்ணயித்து வசூலிப்பதற்குரிய நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்ற கருத்தை அரசுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அறநிலையத் துறைக்குச் சொந்தமான நிலத்தை பல இடங்களில் ஏமாற்றுபவர்களும் உண்டு என்றாலும், சென்னை மாநகரத்தைப் போன்ற பெரிய நகரங்களில், நீண்டகாலமாக அரசுக்குச் சொந்தமான, அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடங்களில் பலர் வீடு கட்டிக் குடியிருந்து கொண்டிருக்கிறார்கள். சென்னையில் மட்டும் ஏறக்குறைய 50,000 குடும்பங்களுக்கு மேலே இருக்கின்றன. அவர்கள் குறைந்த வாடகையைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். சில நேரங்களிலே துறை அவர்களை அப்புறப்படுத்துவதாக மிரட்டிக் கொண்டிருக்கிறது. அப்படி நிரந்தரமாக வீடு கட்டி நீண்டகாலம் வாழ்ந்து கொண்டிருக்கும் சாதாரண ஏழைகளுக்கு இந்தத் துறையின் சார்பாக பட்டா வழங்குவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்ற கருத்தை இந்தத் திருத்தம் வருகிற நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்கள் குறிப்பிட்டதைப்போல, இந்தத் துறைக்குச் சொந்தமான இடங்களைப் பயன்படுத்துகின்றவர்களிடமிருந்து வரவேண்டிய வாடகையை முறையாக வசூல் செய்ய வேண்டுமென்பதற்காக, ஏற்கெனவே இருந்த சட்டங்கள் அந்தளவிற்கு கடுமையானவையாக இல்லையென்பதால் அந்தச் சட்டங்களை மாற்றி சட்டப் பிரிவுகள் 34 (a) முதல் 34 (d) முடிய தமிழ்நாடு சட்டம் 25/2003—ன்மூலமாக புதியதாகச் சேர்க்கப்பட்டன. இதன்படி திருக்கோயில்களுக்குச் சொந்தமான சொத்துக்களுக்கு நியாய வாடகை நிர்ணயம் செய்து சட்டபூர்வமாக்கப்பட்டது.

குத்தகை பாக்கி செலுத்தாமல் இருந்தால் குத்தகைதாரர்களை வெளியேற்றுவதற்கு சட்டப்பிரிவு 34 (b)–ல் வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஆனால், அதே குத்தகைதாரர்கள் நிபந்தனைகளை மீறினால் அவர்களை வெளியேற்றுவதற்கு சட்டபூர்வமாக வழியில்லை. எனவே, இதனை முறைப்படுத்துவதற்காக சட்டப் பிரிவு 34 (b)–ன்கீழ் குத்தகை ஒப்பந்தத்திலுள்ள ஏதாவது ஒரு நிபந்தனையை மீறினாலும் குத்தகையினை முடிக்க, அதாவது termination of lease செய்ய, சட்டத்தில் வகைசெய்வதற்காகத் தற்போது இந்தச் சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது. மற்ற வகையிலே, நம்முடைய உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டு சொன்னதைப்போல, வேறு திருத்தங்கள் தேவைப்படின் பிறகு அவற்றை எடுத்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"*2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/2009) நிறைவேற்றப்பெற வேண்டும்*"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 3–30

8. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(எ) தமிழ்நாடு பள்ளிகள் (கட்டணம் வசூலிப்பதை முறைப்படுத்துதல்) சட்டமுன்வடிவு, 2009 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. *2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு பள்ளிகள் (கட்டணம் வசூலிப்பதை*